
**மேலதிக விபரங்களை**

பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.
சொலத்துாண் மாகாண அரசபாடசாலை திணைக்களம்

எமது இணையத்தள முகவரியில் *vsa.so.ch*
பின்வரும் தகவல்களைத் தரவிறக்கம் செய்யலாம்.
– பன்மொழித் தகவல்கொத்து
– ஜேர்மன் மொழியிலுள்ள விரிவான தகவல்கொத்து



***Volksschulamt***
*Kreuzackerstrasse 1*
*4502 Solothurn*
*Telefon 032 627 29 37*
*vsa@dbk.so.ch*
*vsa.so.ch*

42564 5/22 tamil

# மேற்பிரிவு I

**மூன்றாவது சுழற்சி**
மேற்பிரிவில் 1ம்வகுப்பு முதல் 3ம் வகுப்புவரை உள்ளது.

ஆரம்பபிரிவு கல்வியை முறையாக முடித்த மாணவர்கள் மேற்பிரிவில் கல்வியைத் தொடர்வார்கள். இங்கே படிக்கும் மாணவர்கள் தமது தகுதிக்குரிய தொழிற்கல்வியை அல்லது உயர்தரக்கல்வியை கற்க தங்களைத் தயார் செய்வார்கள். மேற்பிரிவுப் பாடசாலையானது மாணவர்கள் தொழிற்கல்வியைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உதவியளிக்கின்றது. மேற்பிரிவை முடித்து பள்ளிப்பருவத்திலிருந்து வெளியேறும் ஒவ்வொரு மாணவரும் அவர்களுக்கான தொழிற்கல்வியுடன் அல்லது உயர்கல்விப் படிப்பிற்கான அனுமதியுடன்தான் பாடசாலையை விட்டு வெளியேறுவார்கள்.

**மேற்பிரிவில் 3 வருடங்கள் கல்விகற்கவேண்டும். இது 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**

**மேற்பிரிவு B:** குறைந்த கல்வித்திறன் கொண்ட மாணவர்கள் தமக்குரிய தொழிற்கல்வியை தெரிவுசெய்ய தயார்படுத்துவது.
**மேற்பிரிவு E:** ஓரளவு கல்வித்திறன் கொண்ட மாணவர்கள் தமக்குரிய உயர்தரப்பரீட்சையுடன் கூடிய அல்லது உயர்தரப்பரீட்சை இல்லாமல் தொழிற்கல்வியை தெரிவு செய்ய தயார்படுத்துவது. அதுமட்டுமன்றி Fachmittelschule எனப்படும் தரப்படுத்தப்பட்ட உயர்தர தொழிற்கல்விக்கு தயார்படுத்தும் பாடசாலைக்கு செல்லமுடியும்.
**மேற்பிரிவு P:** இது அதிகூடிய புத்திக்கூர்மை படைத்த மாணவர்களுக்கானது. மேற்பிரிவு P யில் 2 வருடங்கள் படிக்கவேண்டும். இவ்வகுப்பில் படிக்கும் மாணவர்கள் தங்களை கிம்னாசியம் எனப்படும் உயர்தரப் பரீட்சைக்கான கல்வியை படிப்பதற்குத் தயார்படுத்துவார்கள்.

**இத்துடன் கட்டாயக் கல்வியாண்டு நிறைவடையும்.**

அரசபாடசாணை நிறைவடையும்போது மாணவர்களுக்கான கல்விச் சான்றிதழ் வழங்கப்படும். இச்சான்றிதழில் அவர்களின் கல்வித் தகமைகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

# கடமைகள்

பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் குழந்தைகளின் வளர்ச்சியிலும் கல்வி முன்னேற்றத்திலும் முக்கிய பங்கு வகிப்பார்கள். குழந்தைகள் நலம் இதில் முதலிடம் வகிக்கின்றது. குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும் அவர்களின் அறிவுத்த்திறன் விருத்திக்காகவும் பாடசாலை பெற்றோர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றது. வரையறுக்கப்பட்ட ஒன்றிணைந்த செயற்பாடானது தகுதிவாய்ந்த பாடசாலைகளிற்கான சான்றிதழாகும். எனவேதான் முக்கிய முடிவுகளை பாடசாலை பெற்றோருடன் சேர்ந்தே எடுக்கின்றது.

கற்பதற்கேற்ற நல்ல சூழலை உருவாக்குதல், அறிவை விருத்திசெய்தல் மற்றும் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளைக் கொண்ட பாடசாலைக் கட்டமைப்பை உருவாக்குதல் போன்றவற்றை பாடசாலையும் ஆசிரியர்களும் கவனிப்பார்கள். முக்கிய விடயங்கள், அவதானிப்புக்கள், மாணவர்கள் பற்றிய புரிதல்கள் போன்றவற்றை பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துவது பாடசாலையின் கடமையாகும். பெற்றோர்களுக்கும் பாடசாலைகளுக்கும் குழந்தைகளுக்கான கல்வி உளவியல் நிபுணர்களின் சேவையானது முறையாக வழங்கப்படுகின்றது.

11 வருடங்கள் (கின்டர்கார்டன் முதல் மேற்பிரிவின் 3ம் வகுப்புவரை) பாடசாலைக்குச் சென்று படிப்பது மாணவர்களின் கடமையாகும். ஒருங்கிணைந்து வாழ்வதற்காக பாடசாலையால் ஏற்படுத்தப்படும் விதிமுறைகளை மாணவர்கள் கடைப்பிடிக்கவேண்டும். தங்கள் அறிவுத˙திறனிற்கும் செயற்திறனிற்குமான பொறுப்பை தாங்களே ஏற்று நடக்கவேண்டும். பாடசாலை மற்றும் பெற்றோர்களின் வழிகாட்டலின்பேரில் தொழிற்கல்வியை மாணவர்கள் தெரிவு செய்யவேண்டும்.

குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும் தொழிற்கல்வித் தேர்வுக்கும் பெற்றோர் உதவவேண்டும். அதேபோல் பெற்றோர் பாடசாலைக்கு வெளியே மாணவர்கள் அறிவுத்திறனை வளர்ப்பதற்கும் உதவி செய்யவேண்டும். பாடசாலையுடனும் ஆசிரியர்களுடனும் ஒருங்கிணைந்து செயற்படுவது மட்டுமன்றி மாணவர்கள் பாடசாலை விதிமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்கவும் பெற்றோரின் பங்களிப்பு அவசியமானது. பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகமளிக்க மாணவர்களை வழி நடத்தவேண்டும். தகவல் கூட்டங்களில் பெற்றோர் கலந்துகொள்ளுதல் முக்கியமானதொன்றாகும். அத்தோடு புரியாத விடயங்களை தெரிந்துகொள்ள அல்லது குழந்தை வளர்ப்பில் பிரச்சினைகள் ஏற்படும்போது பெற்றோர்கள் தாமாக முன்வந்து ஆசிரியர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவேண்டும். ஆசிரியர்களுடன் ஏற்படும் கருத்து மோதல்களை பாடசாலை நிர்வாகம் தீர்த்துவைக்கும்.

பாடசாலை சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை உங்கள் கிராமசேவகர் பிரிவில் உள்ள பாடசாலை நிர்வாகத்திடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

KANTON solothurn
***Volksschulamt***

# அரசபாடசாலை பற்றிய தகவல்கள்



# சொலத்துாண் மாநில அரசபாடசாலை வரவேற்கின்றது

சொலத்துாண் மாநில அரசபாடசாலை குழந்தைகளுக்கும் இளவயதினருக்கும் தேவையான பரந்த பொது அறிவையும் திறமையையும் கற்றுத் தருவதுடன் அவர்கள் தனித்தன்மை உடையவர்களாக வளர்வதற்கு ஊக்கமளிக்கின்றது.

இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு ஒட்டுமொத்த சமுதாயத்தினது ஒத்துழைப்பு பாடசாலைக்கு தேவைப்படுகின்றது. குழந்தையின் வளர்ச்சிக்கும் பாடசாலைக்கல்வியின் வெற்றிக்கும் பாடசாலையினதும் பெற்றோர்களதும்  ஒன்றிணைந்த ஒத்துழைப்பு அவசியமாகும்.

குழந்தைகளும் இளவயதினரும் பாடசாலை மற்றும் தொழிற்கல்வி உலகில் அடியெடுத்துவைக்க எனது மனமார்ந்த நல் ஆசிகள் உரித்தாகட்டும்.

*Andreas Walter*

அரசபாடசாலைகளுக்கான மேலதிகாரி

# சொலத்துாண் மாநில அரசபாடசாலைகள் பற்றி அறிந்திருக்க வேண்டிய விடயங்கள்

ஓவ்வொரு குழந்தைக்கும் அரசபாடசாலைக்குச் செல்வதற்கான உரிமையும் கடமையும் இருக்கின்றது. கின்டர்கார்டன், ஆரம்பப்பிரிவு, மேற்பிரிவு என மொத்தமாக 11 வருடங்கள் அரசபாடசாலையில் கல்விகற்கவேண்டும். அரச பாடசாலை அனைவருக்கும் பொதுவானதும் இலவசமானதுமாகும். இங்கு கற்கும் அடிப்படை அறிவானது குழந்தைகளும் இளையோர்களும் தமக்கான தொழிற்கல்வியினை தேர்வுசெய்து கற்பதற்கும் அல்லது உயர்கல்விமுறையைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவுகின்றது. கற்பிக்கப்படும் பாடங்களும், கொள்கைகளும் ஆண் பெண் என்ற பால்வேறுபாடின்றி சமமாக பயிற்றுவிக்கப்படும். கல்வியாண்டானது ஆகஸ்ட்மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகி அடுத்தவருட யூலைமாத தொடக்கத்தில் முடிவடையும்.

மாநிலம், கிராமசேவகர் மற்றும் பெற்றோர்களின் கூட்டு முயற்சியில்தான் அரசபாடசாலை இயங்குகின்றது.

சாதாரணவகுப்பில் படித்தாலும் பிரத்தியேகமான உதவிகள் தேவைப்படுகின்ற குழந்தைகளுக்கென விசேடபயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. சாதாரணவகுப்பில் படிப்பதற்கான தகுதியுள்ள ஆனால் அறிவுத்திறன் குறைந்த பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வித்திறனுக்கு ஏதுவானவகையில் விசேட பாடத்திட்டங்கள் வழங்கப்படும். மாற்றுத்திறனாளி குழந்தைகள் அவர்களுக்குரிய விசேட பாடசாலைகளில் கல்வி கற்பார்கள்.

# ஆரம்பப்பிரிவு

**முதலாவது சுழற்சி**
இதில் 1ம் 2ம் கின்டர்கார்டன் மற்றும் 1ம் 2ம் வகுப்புக்கள் அடங்கும்.

குழந்தைகள் தங்களது கிராமத்திலேயே கின்டர்கார்டனிற்கு செல்வார்கள். 4 வயது பூர்த்தியானபினதான் குழந்தைகள் கின்டர்கார்டனிற்குச் செல்லமுடியும். பேற்றோர்கள் விரும்பினால் தகுந்த காரணங்களைக்காட்டி தமது கிராமசேவகர் பிரிவில் உள்ள பாடசாலை நிர்வாகத்திடம் கலந்துரையாடி தங்கள் குழந்தைகளை 1 வருடம் தாமதமாக(5வயதில்) கின்டர்கார்டனில் சேர்க்கமுடியும். ஆனால் 4 வயதுமுடியமுன் அதாவது 3வயதில் கின்டர்கார்டனில் சேர்ப்பதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

குின்டர்கார்டனில் குழந்தைகளை பல்திறன்கொண்டவர்களாக முன்னேற்ற அனைத்துவழிகளிலும் ஊக்கமளிக்கப்படும். இங்குள்ள கற்றல் முறையானது குழந்தைகளை சுயமாக இயங்கவும் தன்வயதுள்ள மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து செயல்படவும் தனது சமூகத்திற்கு தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்யவும் உதவியளிக்கின்றது.

1ம் 2ம் வகுப்புக்களில் மாணவர்கள் எழுதுதல், வாசித்தல், ஆரம்பகணிதம் போன்றவற்றைக் கற்றுக்கொள்வது மட்டுமன்றி சுற்றுச்சூழல் பற்றிய அறிவையும் வளர்த்துக்கொள்வார்கள்.

**இணர்டாவது சுழற்சி**
இதில் 3 முதல் 6ம் வகுப்புவரை அடங்கும்.

இணர்டாவது சுற்றோட்டத்தில் மாணவர்கள் விரிவுபட்ட பாடநெறிகளைக் கற்பார்கள். 3ம் வகுப்பிலிருந்து பிரெஞ்சும் 5ம் வகுப்பிலிருந்து ஆங்கிலமும் கற்பிக்கப்படுகின்றது.
பரீட்சை மதிப்பெண்கள் பற்றிய விபரங்கள் கல்விச்சான்றிதழில் பதியப்படும். அத்துடன் செயல்திறன், படிக்கும்விதம் பழகும்விதம் பற்றிய மதிப்பீடுகளும் சான்றிதழில் பதியப்படும்.

வகுப்பிறக்கம் செய்தல் என்பது ஆரம்பப்பாடசாலையின் புதிய நடைமுறையில் இல்லை. மாறாக கல்வியாண்டின் முடிவில் மாணவர்கள் சித்தியடையக்கூடிய மதிப்பெண்களைப் பெறாவிட்டாலும்கூட அவர்கள் அடுத்த வகுப்பிற்கு வகுப்பேற்றம் செய்யப்படுவார்கள்.

மேற்பிரிவிற்கான வகுப்பேற்ற நடைமுறைகள் மாநில விதிமுறைகளுக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைப்பயணம் ஒரு கண்ணோட்டம்

சோலத்துண் மாநிலமானது குழந்தைகளினதும், இளவயதினரதும் அறிவிற்கும் திறமைக்குமேற்ப அவர்கள் வளர்ச்சிபெற பலதரப்பட்ட வகையிலான கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது கீழ்கண்ட வரைபடத்தில் மேலதிக தரவுகளை நீங்கள் அறியலாம்.
முாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும் இளவயதினருக்கும் விசேட கல்விச்சேவைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

| Stufe | Zyklus | Klasse | Schule | | | Schuljahr |
|---|---|---|---|---|---|---|
| Tertiärstufe | | | Tertiärstufe: Berufs- und höhere Fachprüfungen, Höhere Fachschulen, Fachhochschulen, Pädagogische Hochschulen, Universitäten, Eidgenössische Technische Hochschulen, (ETH/EPFL) | | | Schuljahr 16 |
| Sekundarstufe II | | | Berufsmaturitätsausbildung lehrbegleitend (3 oder 4 Jahre) oder anschliessend an Berufslehre: 1 Jahr Vollzeit bzw. 1½ Jahre Teilzeit | Fachmaturität | | Schuljahr 15 |
| | | | | Fachmittelschule | Gymnasium | Schuljahr 14 |
| | | | Berufliche Grundbildung 2, 3 oder 4 Jahre | | | Schuljahr 13 |
| | | | Brückenangebote | | | Schuljahr 12 |
| Ende der obligatorischen Volksschule | | | | | | |
| Sekundarstufe I | Zyklus 3 | 3. Klasse | Sekundarschule B + E | | Sek P | Schuljahr 11 |
| | | 2. Klasse | | | | Schuljahr 10 |
| | | 1. Klasse | | | | Schuljahr 9 |
| Primarstufe | Zyklus 2 | 6. Klasse | Primarschule | | | Schuljahr 8 |
| | | 5. Klasse | | | | Schuljahr 7 |
| | | 4. Klasse | | | | Schuljahr 6 |
| | | 3. Klasse | | | | Schuljahr 5 |
| | Zyklus 1 | 2. Klasse | | | | Schuljahr 4 |
| | | 1. Klasse | | | | Schuljahr 3 |
| | | 2. Klasse | Kindergarten | | | Schuljahr 2 |
| | | 1. Klasse | | | | Schuljahr 1 |

- **Sekundarstufe I** – **மேற்பிரிவு I**
- Sek B – மேற்பிரிவு B
- Sek E – மேற்பிரிவு E
- Sek P – மேற்பிரிவு P

- **Primarstufe** – ஆரம்பப்பிரிவு
- Kindergarten – கின்டர்கார்டன்
- Primarschule – ஆரம்பப்பாடசாலை